# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශේෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2028/52 - 2017 ජූලි මස 21 වැනි සිකුරාදා - 2017.07.21

*2028/52 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக் கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

*2001 ஆம் ஆண்டின் 1,169 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் மத்திய மாகாண சபை வெளியிட்டுள்ள அறிவித்தலை திருத்தம் செய்தல்*

*1992 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து நியதிச் சட்டத்தின் 24 ஆம் பந்தியின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் மத்திய மாகாண சபை வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள் சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் எதிரிவீர வீரவர்தன ஆகிய நான், 2001, சனவரி 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள மத்திய மாகாண சபையின் 2000 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபை நியதிச் சட்டத்தின் பணியாட் தொகுதியினர் தொடர்பிலான அதிகாரத்தின் பிரகாரம் 21(2) ஆம் பிரிவு கீழ் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

"வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கென தனியானதொரு தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணம் அனுமதிக்கப்படும் வரையில் அதிகார சபையின் சகல தாபன மற்றும் நிதி நிர்வாக நடவடிக்கைகளுக்கும் அரச சேவைகள் தொடர்பில் வலுவிலுள்ள தாபன விதிக் கோவையும், நிதிப் பிரமாணமும் ஏற்புடையதாகும்."

எதிரிவீர வீரவர்தன,
வீதி அபிவிருத்தி, போக்குவரத்து, மின்சக்தி, எரிபொருள்
சக்தி மற்றும் வீடமைப்பு நிர்மாண அமைச்சர்,
மத்திய மாகாண சபை.

*8-223*